கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொ),
சென்னை – 600 006.

பெறுநர்
அனைத்து அரசு கலை, அறிவியல் மற்றும்
கல்வியியல் கல்லூரி முதல்வர்கள்.

ந.க.எண். 1321/ஜெ1 / டி5 / 2012 நாள் 09 .05.2012

அய்யா / அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – அரசு கல்லூரிகளில் பணிபுரியும் மகளிர் உதவிப் பேராசிரியர் மகப்பேறு விடுப்பு மற்றும் மீள மறுநியமன ஆணை கோருதல் – தொடர்பாக.

---

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் மகளிர் உதவிப் பேராசிரியர்கள் மகப்பேறு விடுப்பில் செல்லும் பணியாளர்கள் சார்பில் உரிய விண்ணப்பத்தினை தமிழ்நாடு அடிப்படை விதி 101 (அ) மற்றும் விடுப்பு விதிகளின் படி பரிசீலனை செய்து உடனுக்குடன் இயக்குநருக்குச் சமர்ப்பித்து விடுப்பு ஒப்பளிப்பு பெற்று தாமதமின்றி பணியாளர்களுக்கு விடுப்பு ஊதியம் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென கல்லூரி முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். விடுப்பு விண்ணப்பத்துடன் விடுப்புத்தகுதிச் சான்று முதல்வரால் வழங்கப்பட வேண்டும். பணியாளரின் உறுதிமொழிக் கடிதம் இணைத்துள்ள படிவத்தில் கருத்துருவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விடுப்பு முறைப்படுத்தி ஊதியம் முறைப்படுத்தப்படுவதுடன் மகப்பேறு விடுப்புக் காலம் முடிவடையும் நிலையில் போதுமான கால அவகாசத்துடன் மறுநியமனம் கோருதல் அவசியம் என்பதை அறிவுறுத்துமாறும் தெரிவிக்கலாகிறது.

09-05-12

கல்லூரிக் கல்வி இயக்குநருக்காக

நகல்
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி
இணை இயக்குநர்கள்.